2017 மார்ச் 20]

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, ஒரு பழமொழியைச் சொன்னார்கள். அந்தப் பழமொழி அவைக் குறிப்பில் இடம்பெற வேண்டாமே! (குறுக்கீடுகள்) அது நன்றாக இல்லையே! அவைக் குறிப்பில் இடம் பெற வேண்டுமா? அது நன்றாக இல்லையே! (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

சரி, நீங்கள் விருப்பப்பட்டால், உங்களுக்காக, அது அவைக் குறிப்பில் இருந்துவிட்டுப் போகட்டும். அதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் விருப்பப்பட்டால், அது அவைக் குறிப்பில் இருப்பது பற்றி எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அது நல்லது இல்லை என்பதுதான் என்னுடைய வாதம். (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்ன அந்தப் பழமொழியே நல்ல பழமொழி இல்லை; அவ்வளவுதான். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் உட்காருங்கள். மற்றவற்றைப் பிறகு பேசலாம். அவ்வளவுதான், விவாதம் முடிந்துவிட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 21–3–2017 (செவ்வாய்க்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

19. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கான (முன்னாள் உறுப்பினர்களுக்கான மருத்துவ கவனிப்பு மற்றும் சிகிச்சை) விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 7–8–2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்–III, பிரிவு 1 (a)–ல் வெளியிடப்பட்ட பொதுத் துறையின் SRO A–22/2013 ஆம் எண் அறிவிக்கையின் முகப்புரைக்கு திருத்தம் செய்தது குறித்து பொது (நிருவாகம்–1 மற்றும் சட்டமன்றம்) துறையின் 21–9–2015 ஆம்

நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1110–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

20. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1)த் துறையின் 29–1–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 18–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

21. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு வக்ஃபு தீர்ப்பாய (பணி நிலைமைகளும் நடைமுறையும்) விதிகளை இயற்றியது குறித்து பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (T1)த் துறையின் 7–10–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 55–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1995 ஆம் ஆண்டு வக்ஃபு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 43/1995) 111 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

22. சென்னையிலுள்ள, ரஷ்யக் கூட்டமைப்பின் துணை தூதரகத்திற்கும் மற்றும் அதன் அலுவலர்களுக்கும் அலுவலக பயன்பாட்டிற்காகவும் தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவும் தமிழ்நாட்டில் விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு 1–7–2014 ஆம் நாள் முதல் மதிப்புக் கூட்டு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B2)த் துறையின் 7–12–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 128–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

23. 12–12–2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்–II, பிரிவு 2–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/751(d–1)/2014 ஆம் எண் அறிவிக்கைக்கு வேறுபாட்டினை செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2)த் துறையின் 15–12–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 129–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2017 மார்ச் 20] **[பேரவைத் தலைவர்]**

24. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1)த் துறையின் 29–12–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 132–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

9. 2017–2018 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரை மற்றும் வரவு–செலவுத் திட்ட வெளியீடு எண்கள் 56 முதல் 59 வரை (58 புத்தகங்கள்.)

10. 2017–2018 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

11. 2017–2018 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை.

12. 2017–2018 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு–பகுதி–I.

13. 2017–2018 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு–பகுதி–II.

14. 2017–2018 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.

15. 2017–2018 ஆம் ஆண்டிற்கான நலத் திட்டச் செலவினங்கள் குறித்த அறிக்கை.

16. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு புதுமை முயற்சிகளின்கீழ் புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி–II திட்டங்கள்).

17. 2017–2018 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

18. வரவு–செலவுத் திட்ட விளக்க நூல், 2017–2018.

19. 2017–2018 ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.